# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

Reg.No.

## சமூக அறிவியல்

நேரம்: 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள்: 100

14 x 1 = 14

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. லத்தீன் அமெரிக்காவுடன் நல்ல அண்டை வீட்டுக்காரன் எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்க குடியரசு தலைவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

2. ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தான நாள்
அ) ஜூன் 26, 1942 ஆ) ஜூன் 26, 1945
இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

3. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?
அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம சமாஜம் இ) பிரார்த்தனை சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம்

4. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது ?
அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்

5. கூற்று: காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939 ஆம் ஆண்டு பதவி விலகின.
காரணம் : காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்

6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

7. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
அ) ஹிராகுட் அணை ஆ) பக்ரா நங்கல் அணை
இ) மேட்டூர் அணை ஈ) நாகார்ஜுனா சாகர் அணை

8. இந்தியாவில் முதல் சணல் ஆலை நிறுவப்பட்ட இடம்
அ) கொல்கத்தா ஆ) மும்பை இ) அகமதபாத் ஈ) பரோடா

9. மாங்குரோவ் காடுகள் பாதுகாப்பானது.
அ) கடற்கரை பகுதிகளை கடல் அரிப்பிலிருந்து ஆ) பவளப்பாறைகளை
இ) கடலோரப் பகுதிகளை ஈ) இவையனைத்தும்

10. இந்தியாவின் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

11. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr.B.R.அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது ?
அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை

12. புதிதாக சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்.
அ) மவுண்ட்பேட்டன் பிரபு ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்
இ) கிளமண்ட் அட்லி ஈ) கான் அப்துல் கஃபார்கான்

13. TANSI கழகம் எதனை மேற்பார்வையிட அமைக்கப்பட்டது ?
அ) சிறிய அளவிலான தொழிற்சாலைகள் ஆ) கனரக தொழிற்சாலைகள்
இ) குடிசைத் தொழில் தொழிற்சாலைகள் ஈ) இலகு ரக தொழிற்சாலைகள்

14. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
கூற்று: விலை குறைந்தால் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மாறானது.
காரணம்: பொருட்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
அ) கூற்று சரியானது காரணம் தவறானது ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது
இ) கூற்று சரியானது ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல.
ஈ) கூற்று சரியானது. காரணம் என்பது கூற்றின் சரியான விளக்கம்.

பகுதி - ஆ

10 x 2 = 20

II. ஏவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா)

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


16. மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.
17. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
18. ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன ?
19. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
20. தக்காண பீடபூமி- குறிப்பு வரைக.
21. "பருவமழை வெடிப்பு " என்றால் என்ன ?
22. தகவல் தொடர்பு என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை?
23. தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்களை எழுதுக.
24. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை ?
25. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
26. சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுவது ஏன் ?
27. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?
28. குறிப்புவரைக: கடல் பாதுகாப்பு மேலாண்மை

பகுதி - இ

III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா) 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   i) _______ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
   ii) _______ இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பு ஆகும்.
   iii) தேயிலை மற்றும் காபி செடிகள் பயிரிடுவதற்கு ஏற்ற மண் _______ ஆகும்.
   iv) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் _______.
   v) _______ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு செயல்பாடுகளை ஆய்வு செய்க.
32. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.
33. 1. **வேறுபடுத்துக:**
      1. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
      2. சாலை வழி போக்குவரத்து இரயில் வழிபோக்குவரத்து
   2. **காரணம் கூறுக:** கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
34. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
35. ஏதேனும் இரண்டு இந்தியாவின் பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
36. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
37. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?
41. கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுகளுக்கு இடையே ஏதேனும் 5 நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்க. 1900 முதல் 1930 வரை
42. **கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**
   1. முத்து துறைமுகம் 2. பிரான்சு 3. ரஷ்யா 4. சீனா 5. நாகசாகி

பகுதி - ஈ

IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 8 = 16

43. அ) 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும். *(அல்லது)*
   ஆ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப்போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
44. கீழ்க்காணும் இடங்களை இந்தியா / தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.

| இந்தியா | | தமிழ்நாடு |
|---|---|---|
| 1. இமயமலை | | 1. சென்னை |
| 2. தார் பாலைவனம் | | 2. தொட்டபெட்டா |
| 3. சோட்டா நாக்பூர் பீடபூமி | | 3. கன்னியாகுமரி |
| 4. சுந்தரவனம் | | 4. சேலம் |
| 5. கொங்கண கடற்கரை | | 5. காவேரி ஆறு |
| 6. சில்கா ஏரி | *(அல்லது)* | 6. மன்னார் வளைகுடா |
| 7. மன்னார் வளைகுடா | | 7. அகஸ்தியமலை |
| 8. மின்னியல் தலைநகரம் | | 8. வங்காள விரிகுடா |

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com